DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 17** | |
| Name | : | திரு.அருண் சுந்தர் | Caste | : | |
| Father's Name | : | P.ராமு | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of September 2023. 12-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநீலக்குடி காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26/07/2021 ஆம் தேதி திருநீலக்குடி காவல் நிலைய குற்ற எண் 648/2021, ச/பி 302 இதச வழக்கில் இறந்து போன ராஜேந்திரன் த/பெ சுப்பயைன் என்பவர் தொடர்பான வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து, CP 69/2021 இன் படி வழக்கு சொத்துக்களை நீதிமன்ற உத்தரவு பெற்று, பகுப்பாய்விற்காக தஞ்சாவூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். பின்னர் நிலையம் ஆய்வாளரிடம் அறிக்கை செய்தேன். அவ்வாறு நான் திருவிடைமருதூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து தடய பொருட்களை கொண்டு செல்வதற்காக வேண்டுகோள் கடிதம் க.எண் 803/2021/த.எ.நாள்

26/07/2021 **அ.சா.ஆ.12 ஆகும்.** எனக்கு ஆய்வாளர் கொடுத்த பாஸ்போர்ட் **அ.சா.ஆ. 13 ஆகும்.** என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ–12 இல் மாதிரி கையொப்பம் செய்து தான் நான் சான்று பொருட்களை பெற்றேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

**/உண்மை நகல்/**

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 16** | |
| Name | : | **திரு.சரவணகுமார்** | Caste | : | |
| Father's Name | : | **கே.ரெங்கராஜன்** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of September 2023. 12-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநீலக்குடி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02/07/2021 ஆம் தேதி திருநீலக்குடி காவல் நிலைய குற்ற எண் 648/2021, ச/பி 302 இதச வழக்கில் இறந்து போன ராஜேந்திரன் த/பெ சுப்பயைன் என்பவர் பிரேதத்தை பிரேத விசாரணைக்கு பின் வேண்டுகோள் கடிதத்துடன் பெற்று, கும்பகோணம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவரிடம் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்துடன் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை முடிவுற்று பிரேதத்தை இறந்தவரின் உறவினர்கள் வசம் ஒப்படைத்தேன். பின் நிலையம் வந்து ஆய்வாளரிடம் பிரேத பரிசோதனையின் போது மருத்துவர் இறந்தவரின் உடலில் இருந்து எடுத்துக்கொடுத்த நீலம், சிவப்பு வெள்ளை கருப்பு கட்டம் போட்ட ரத்தக்கறையுடன் கூடிய கைலி ஒன்றை படிவம் 95 இல் ஆய்வாளரிடம் ஒப்படைத்து, அறிக்கை செய்தேன். ஆய்வாளர் இவ்வாறு பிரேத பரிசோதனைக்கு செல்வதற்கு எனக்கு கொடுத்த பாஸ்போர்ட் **அ.சா.ஆ. 11**

**ஆகும்.** என்னிடம் காண்பிக்கப்படும் கைலி தான் இறந்தவரின் உடலில் இருந்து எடுத்து என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நீளம், சிவப்பு வெள்ளை கருப்பு கட்டம் போட்ட ரத்தக்கறையுடன் கூடிய கைலி –1 **சா.பொ.3 ஆகும்.** இறந்தவரின் உடலில் இருந்து சேகரிக்கப்பட்ட உள்ளுறுப்புகளை நான் மருத்துவமனையில் இருந்து PM No 139/2021 இன் படி மருத்துவரிடமிருந்து பெற்று, அன்றே தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் பகுப்பாய்விற்காக ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

**/உண்மை நகல்/**

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 15** | |
| Name | : | ஆனந்தராஜ் | Caste | : | |
| Father's Name | : | செல்வராஜ் | Calling | : | |
| Village | : | மலையப்பநல்லூர், NSK நகர் மேலத்தெரு | Religion | : | |
| Taluk | : | திருவிடைமருதூர் | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of September 2023. 12-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)

**முதல் விசாரணை**

நான் தற்போது மலையப்பநல்லூர், NSK நகர் மேலத்தெரு வசித்து வருகிறேன். இந்த வழக்கின் வாதியை தெரியாது. இறந்து போன ராஜேந்திரனை தெரியாது. ஆஜர் எதிரிகளில் முதல் எதிரி சந்தோஷை மட்டும் தெரியும். சந்தோஷ் என் அக்கா பையன். என் அக்கா பையன் இருசக்கர வாகனம் வைத்திருக்கிறான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் போலிசார் விசாரணையில், முதல் எதிரி என் அக்கா கவிதா மகன் என்றும், அவன் ஊருக்கு வரும்போதெல்லாம் எங்கள் தெரு அமர்தலிங்கம் மகன் ராஜேஷ் உடன் பழகி வந்தான் என்றும், சுப்பையன் மகன் ராஜேந்திரனுக்கும் சந்தோஷ்க்கும் இடப்பிரச்சனை இருந்த விவரம்

தெரியும் என்றும், கடந்த 02/07/2021 அன்று அதிகாலை சந்தோஷ் தன்னுடைய Yamaha Ray – Tn 68 AE 2570 என்ற மோட்டார் சைக்கிளை நான் தஞ்சாவூர் வரை செல்கிறேன் வண்டி இங்கேயே இருக்கட்டும் என்று சொல்லிவிட்டுசென்றான் என்றும், அதன்பிறகு 03/07/2021 அன்று திருநீலக்குடி போலிசார் எங்கள் ஊருக்கு வந்து அமர்தலிங்கம் மகன் ராஜேஷை கைது செய்தார்கள் என்றும், அப்போது தான் சந்தோஷ், ராஜேஷ் மற்றும் செந்தில் குமார் ஆகியோர் சேர்ந்து ராஜேந்திரன் என்பவரை கொலை செய்துவிட்டார்கள் என்ற விவரம் தெரியும் என்றும், சந்தோஷ் நீதிமன்றத்தில் சென்று சரணடைந்துவிட்டதாகவும் தெரிந்துக்கொண்டேன் என்றும், 10/07/2021 அன்று அவனை விசாரணைக்கு எடுத்து போது அவன் கொலை செய்துவிட்டு தப்பித்து செல்வதற்காக பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை என் வீட்டில் வைத்திருப்பதாக போலிசார் விசாரணையில் சொன்னதன் பேரில் அன்று காலை 10 மணிக்கு போலிசார் என் வீட்டிற்கு வந்து சந்தோஷ் விட்டு சென்ற அவனுடைய மோட்டார் சைக்கிளை கைப்பற்றி சென்றார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது முதல் எதிரி சந்தோஷ் என் அக்கா மகன் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | | : | **S.C : 31/2022** |
| Prosecution Witness | | | | : | **PW - 14** |
| Name | : | முருகானந்தம் | Caste | : | |
| Father's Name | : | சண்முகராஜ் | Calling | : | |
| Village | : | திருநாகேஸ்வரம் | Religion | : | |
| Taluk | : | திருவிடைமருதூர் | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of September 2023. 12-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநாகேஸ்வரத்தில் வசித்து வருகிறேன். கோவிலுக்கு வர்ணம் அடிக்கும் வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரி செந்தில் குமார் என்னுடைய நண்பர். இரண்டு வருடத்திற்கு முன்பு நான் மேற்படி செந்திலை சன்னாபுரம் ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றேன். அவர் தனக்கு நெஞ்சி வலிப்பதாகவும், படபடப்பாகவும் இருப்பதாக சொன்னதனால் நான் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மறு நாள் 2.30 மணிக்கு போலிசார் வீட்டிற்கு வந்து யாரையோ கொலை செய்துவிட்ட விவரம் பற்றி விசாரித்தார்கள். நான் மருத்துவமனைக்கு அவர் படபடப்பாக இருந்ததால் அழைத்து சென்றேன் என்ற விவரத்தை மட்டும் சொன்னேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 13** | |
| Name | : | தியாகராஜன் | Caste | : | |
| Father's Name | : | ராஜேந்திரன் | Calling | : | VAO |
| Village | : | தேப்பெருமாநல்லூர். | Religion | : | |
| Taluk | : | திருவிடைமருதூர் | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of September 2023. 12-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)

**முதல் விசாரணை**

நான் தற்போது தேப்பெருமாநல்லூரில் வசித்து வருகிறேன். நான் தற்சமயம் கும்பகோணம் தாலுக்கா 32 பௌண்டரீகபுரத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் சன்னாபுரத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது, 03/07/2021 ஆம் தேதி மாலை 5 மணியளவில் அணைக்குடி திருநாகேஸ்வரம் கிராம நிர்வாக அலுவலர் சங்கர் என்பவரை சந்திக்க அவர் அலுவலகத்திற்கு சென்ற போது, உப்பிலியப்பன் கோவில் பழைய செட்டித்தெருவை சேர்ந்த ஜெயராமன் மகன் செந்தில் என்பவர் தனது தெருவை சேர்ந்த சுப்பையன் மகன் ராஜேந்திரன் என்பவரை தானும், தனது தெருவை சேர்ந்த துரை சாமி மகன் சந்தோஷ் மற்றும் மலையப்பநல்லூரை சேர்ந்த ராஜேஷ் என்பவரும் சேர்ந்த வெட்டி கொலை செய்துவிட்டதாகவும், இதில் துரைசாமி மகன் சந்தோஷ் என்பவர் தஞ்சாவூர் நீதிமன்றத்தில் சரணடைந்துவிட்டதாகவும், அவர் தனது பெயரை கூறிவிடுவார் எனவும், அப்படி கூறிவிட்டால் போலிஸ் தன்னை பிடித்து அடிப்பார்கள் என பயந்து தன்னிடம் வந்து

சரணடைந்து வாக்குமூலம் அளிப்பதாக கூறினார். அதன் பேரில் அவர் தானாக முன்வந்து யாருடைய வற்புறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி தன்னிச்சையாக கொடுத்த வாக்குமூலத்தை அணைக்குடி திருநாகேஸ்வரம் கிராம நிர்வாக அலுவலர் சங்கர் என்பவர் அவர் சொல்ல சொல்ல தன் கைப்பட அதை பதிவு செய்து, செந்திலிடம் முதலில் கையெழுத்து வாங்கினார். பின்னர் சங்கரும் அதில் கையெழுத்து போட்டார். நானும் அதில் ஒரு கையெழுத்து போட்டேன். காண்பிக்கப்படும் அ.சா.ஆ.4 வாக்குமூலம் தான் எங்கள் முன்பாக செந்தில் என்பவர் கொடுத்ததாகும். அவரை இரவு 8 மணியளவில் திருநீலக்குடி காவல் நிலையத்தில் நானும், சங்கரும் கொண்டுபோய் ஒப்படைத்து, அவர் கொடுத்த வாக்குமூலத்தையும் ஆய்வாளரிடம் ஒப்படைத்தோம். திருநீலக்குடி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/உண்மை நகல்/

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C : 31/2022** | |
| Prosecution Witness | | | : | **PW - 12** | |
| Name | : | சுரேஷ் | Caste | : | |
| Father's Name | : | செல்லத்துரை | Calling | : | |
| Village | : | தோட்டவீடு,<br>பந்திதிருச்சேரை | Religion | : | |
| Taluk | : | கும்பகோணம் | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of September 2023. 12-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)

**முதல் விசாரணை**

நான் தற்போது தோட்டவீடு, பந்திதிருச்சேரையில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 யை தெரியும். இறந்து போன ராஜேந்திரன் என் தாய் மாமா. அ.சா.1 எனக்கு போன் செய்து மாமா ராஜேந்திரனை இடம் சம்மந்தமாக சந்தோஷ் வெட்டி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டிய விவரத்தை முதல் நாள் சொன்னார். மறுநாள் காலை அ.சா.1 அருஷ ராஜ் போன் செய்து, என் மாமா ராஜேந்திரனை நாட்டாற்றங்கரை காளவாய் கொட்டகை வாசலில் வைத்து துரைசாமி மகன் சந்தோஷ் வெட்டி கொலை செய்துவிட்டதாக தெரிவித்தார். நான் உடனே அந்தயிடத்திற்கு போனேன். என் மாமா ராஜேந்திரன் வெட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்தார். அவருக்கு தலை, முகம், புடணி, இடது முன் கை மற்றும் பலவேறு இடங்களில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டது. என் மாமாவிடம் பிரச்சனை செய்த சந்தோஷ், செந்தில், ராஜேஷ் ஆகியோர் இன்று நீதிமன்றத்தில்

ஆஜராகியுள்ளார்கள். இது சம்மந்தமாக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வைத்து என்னை ஆய்வாளர் பிரேத விசாரணையின் போது விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஒப்பம் (xxxxxx)

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

**/உண்மை நகல்/**

ஒப்பம் (xxxxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | | : | **S.C : 31/2022** |
| Prosecution Witness | | | | : | **PW - 11** |
| Name | : | திரு.ரமேஷ் | Caste | : | |
| Father's Name | : | சுந்தரேசன் | Calling | : | |
| Village | : | பழைய செட்டித்தெரு, உப்பலியப்பன்கோவில் | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12th day of September 2023. 12-09-2023

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)

**முதல் விசாரணை**

நான் தற்போது பழைய செட்டித்தெரு, உப்பிலியப்பன்கோவிலில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை பார்க்கிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 யை தெரியும். இறந்து போன ராஜேந்திரன் என் சித்தப்பா. அவர் நாட்டாற்றங்கரையில் காளவாய் வைத்து அருகிலேயே தோட்டம் போட்டு காய் கறி பயிர்போட்டு வந்தார். 4, 5 நாட்களுக்கு ஒரு முறை வீட்டிற்கு வருவார். காளவாயிலேயே கொட்டகை போட்டு தங்கியிருந்தார். இந்த தோட்டத்திற்கு மேற்கு பக்கமாக சந்தானகிருஷ்ணன் இடத்தை என் சித்தப்பா சந்திரகாசன் வாங்கி அனுபவித்து வந்தார். சந்திரகாசன் இறந்த பிறகு என் சித்தப்பா ராஜேந்திரன் காய், கறி போட்டு அந்தயிடத்தை பராமரித்து வந்தார். செந்தில் என்பவர் சந்தோஷ்யிடம் இந்த இடத்தை நீ கேளு என்று சொல்லிகொடுத்து, சந்தோஷ் வந்து என் சித்தப்பாவிடம் அந்தயிடத்தை கேட்டார். அந்தயிடத்தை 3 மாதத்தில் கொடுக்க வேண்டும் என்று என்

சித்தப்பா ராஜேந்திரனை 2, 3 பேர்களை வைத்து மிரட்டி பத்திரத்தில் எழுதி வாங்கிக்கொண்டார். சந்தோஷ், செந்தில், ராஜேஷ் ஆகிய இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகள் தான் என் சித்தப்பா ராஜேந்திரனை இடத்தை கேட்டு மிரட்டியவர்கள். என் சித்தப்பா இடத்தை கொடுக்காமல் வக்கில் நோட்டீஸ் அனுப்பிவிட்டார். வக்கில் நோட்டீஸ் அனுப்பியவுடன் சந்தோஷ் என் சித்தப்பா ராஜேந்திரனை வந்து மிரட்டிவிட்டு போனதாக சொன்னார்கள். மறுநாள் காலை 02/07/2021 காலை 6 மணிக்கு எனக்கு தகவல் வந்தது. சித்தப்பா ராஜேந்திரனை வெட்டிபோட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். நான் போய் கொல்லையில் பார்த்தேன். தலையில் மூன்று வெட்டு, புடணி, கை ஆகிய இடங்களில் வெட்டுப்பட்டு தலைகுப்புற இறந்து கிடந்தார். அ.சா.1 புகார் கொடுத்தார். என் அப்பா பெயர் சுந்தரேசன். இந்த பிரச்சனைகூரிய சந்தானகிருஷ்ணன் இடத்திற்கு எதிர்த்தாற்போல் எங்களுக்கு சொந்தமான இடம் உள்ளது. அந்தயிடம் சம்மந்தமாக என் அப்பா சுந்தரேசன் உரிமையியல் நீதிமன்றத்தில் செல்லப்பா என்பவர் மீது வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கு என் அப்பா சுந்தரேசனுக்கு சாதகமாக தீர்ப்பானது. அதில் இருந்து செல்லப்பா குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கு இடையே முன் விரோதம் உள்ளது. அந்த செல்லப்பாவின் தம்பி மருமகன் தான் ஆஜர் எதிரி செந்தில். என்னிடம் காண்பிக்கப்படும் தீர்ப்பாணை நகல் தான் என் அப்பா தாக்கல் செய்து பெற்ற உத்தரவு ஆகும். அவ்வாறு அசல் வழக்கு எண் 184/1999 வழக்கின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையின் சான்றிட்ட நகலை காண்பித்து அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட அதன் ஜெராக்ஸ் நகல் **அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**ஒப்பம் (xxxxxx)**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

**ஒப்பம் (xxxxxx)**
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

**/உண்மை நகல்/**

**ஒப்பம் (xxxxxx)**
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.